
# யாருக்கு ஓட்டு போடலாம்... வாக்காளரின் குழப்பம்

குர்ச்சரண் தாஸ்



கடந்த 2014-ம் ஆண்டு நடந்த மக்களவைத் தேர்தலில் மோடிக்கு ஓட்டு போட்டதால், பல நண்பர்களை நான் இழந்தேன். அடுத்து வந்த பண மதிப்பு நீக்க நடவடிக்கை, ஆணவ அரசியல், அரசு அமைப்புகளை பலவீனப்படுத்தியது போன்றவற்றுக்காக மோடியை விமர்சனம் செய்ததால், வலதுசாரி நண்பர்கள் பலரை இழந்தேன். நண்பர்களே இல்லாத நிலையில், சரியான இடத்துக்குத்தான் வந்திருக்கிறோம் என்பதை உணர்ந்தேன்.

தேர்தல் வரும் இந்த நேரத்தில் பாஜக வாக்குறுதி அளித்த ‘நல்ல நேரம்’ வரவில்லை. ஆனால் தேசப்பற்று அதிகரித்திருக்கிறது. இந்தியா மாறிக் கொண்டிருக்கிறது. மோடி பக்தர்களாலும் மோடி வெறுப்பாளர்களாலும் நான் சூழப்பட்டிருக்கிறேன். இரு தரப்புமே சரியில்லை. இந்தமுறை யாருக்கு வாக்களிக்கலாம் என்பதுதான் எனது குழப்பம்.

ராகுல் காந்தி மீது எனக்கு நம்பிக்கை இல்லை. மேலும் குடும்ப ஆட்சி எனக்குப் பிடிக்காது. மோடியை எப்படியாவது ஆட்சியில் இருந்து அகற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு கூட்டு சேர்ந்திருக்கும் எதிர்க்கட்சிகளின் மெகா கூட்டணியை நினைத்தாலே பயமாக இருக்கிறது. ஒரே குழப்பமாக இருக்கிறது. இதில் ஒரே ஆறுதலான விஷயம் என்னவென்றால், நான் மட்டும் இப்படி இல்லை. என்னைப் போல் இந்திய வாக்காளர்கள் பலரின் சோக கதையும் இதுதான்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நானும் அதிருப்தியில்தான் இருந்தேன். பணவீக்கம் அதிகமாக இருந்தது. வளர்ச்சி சரிந்து கொண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் ஊழல். ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு முடங்கிப் போயிருந்தது. மக்கள் தொகையில் அதிக எண்ணிக்கையில் இளைஞர்கள் இருந்தார்கள். இந்த அருமையான சூழலில் இந்தியா மீண்டும் வளர்ச்சியைத் தவற விடக் கூடாதே என துடித்தேன். இந்த இளைஞர்களுக்கு எல்லாம் வேலை கிடைத்தால், நாட்டின் வளர்ச்சி எங்கேயோ போய் விடும் என நினைத்தேன். அடுத்து வரும் தலைவரின் நோக்கம், வேலை வாய்ப்புகளை உருவாக்குவதாகத்தான் இருக்க வேண்டும் என விரும்பினேன். இல்லாவிட்டால், அடுத்து வரும் 12 ஆண்டுகளுக்கு வாய்ப்புகள் இல்லாமல் போனால், இளைஞர்கள் அனைவருக்கும் வயதாகி விடுமே என கவலைப்பட்டேன். இருக்கும் பிரதமர் வேட்பாளர்களை ஒப்பிட்டுப் பார்த்து, மோடிதான் ஒரே நம்பிக்கை என அவருக்கு வாக்களிக்க முடிவு செய்தேன்.

அது அவ்வளவு எளிதான முடிவல்ல. இந்து தேசியவாதத்தில் எனக்கு உடன்பாடு கிடையாது. மோடியின் சர்வாதிகார குணம் எனக்குத் தெரியும். அதனால் மதச்சார்பின்மைக்கு ஆபத்து என்பதும் தெரியும். 2002-ல் நடந்த குஜராத் சம்பவத்தை அவ்வளவு எளிதாக மறக்க முடியுமா என்ன.. ஆனாலும் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகாவிட்டால், இப்போது இருக்கும் தலைமுறையும் வீணாகி விடுமே என்ற பயம் இருந்தது. ஏற்கனவே, 1950 முதல் 1990 வரை லைசென்ஸ் ராஜ்ஜியம் காரணமாக 2 தலைமுறைகளை வீணடித்து விட்டதால் இனியும் அந்த நிலை நீடித்தால் கஷ்டம் என நினைத்தேன். அதேபோல், நாட்டின் ஜனநாயக அமைப்புகள் சர்வாதிகார ஆட்சியைத் தடுக்கும் வலிமை கொண்டவை என்றும் 2002-ல் நடந்த குஜராத் சம்பவம் மூலம் மோடி பாடம் கற்றுக் கொண்டிருப்பார் என்றும் நினைத்து விட்டேன்.

ஆனால், ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, எதிர்பார்த்த வேலை வாய்ப்புகள் வராததாலும் விவசாயிகளின் மோசமான நிலை மாறாததாலும் ஏமாற்றம் அடைந்தேன். தனது மெஜாரிட்டி பலத்தின் மூலம் சீர்திருத்தங்களை விரைந்து மேற்கொண்டு, மாற்றத்துக்கு வித்திடும் தலைவராக மோடி மாறுவார் என நான் நினைத்தது நடக்கவில்லை.

விவசாய விளைபொருட்கள் விநியோகத்தில் அவர் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்திருந்தாலே, விவசாயிகளின் தற்போதைய மோசமான நிலையை தவிர்த்திருக்கலாம். வங்கித் துறையில் ஏற்பட்ட நெருக்கடியால் அரசு வங்கிகளுக்கு ஏர் இந்தியா நிறுவனத்தின் நிலைமை ஏற்படுமோ என்ற அச்சம் ஏற்பட்டது. அதைத் தவிர்க்க மோடி, அவற்றை தனியார் மயமாக்க முயற்சிகள் எடுத்திருக்கலாம். அதுவும் செய்யவில்லை.

எது எப்படியோ, பொருளாதாரம் சரியாக நிர்வகிக்கப்பட்டதில் எனக்கு சந்தோஷம். நிதிப் பற்றாக்குறை குறைந்தது. பணவீக்கம் எப்போதும் இல்லாத அளவுக்கு 2 சதவீதம், 3 சதவீதம் எனக் குறைந்தது. உள்கட்டமைப்பு வசதிகளில் முன்னேற்றம் ஏற்பட்டது. அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்பை, டிஜிட்டல் மயமாக்க மோடி விரும்பியதால், ஊழல் குறைந்தது.

முக்கிய சீர்திருத்தங்களான வங்கித் திவால் சட்டம், ஜிஎஸ்டி வரிமுறை மற்றும் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக பணம் செலுத்தும் முறை போன்ற சீர்திருத்தங்களால் அடுத்தடுத்த ஆண்டுகளில் பெரும் பலன்



கிடைக்கும். பணமதிப்பு நீக்க நடவடிக்கை மிகவும் பாதிப்பானது என்றாலும் இனிவரும் காலங்களில் ஜிஎஸ்டி மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும்.

வங்கித் திவால் சட்டம் மூலம் எதிர்காலத்தில் வங்கியின் நிதி சரியான வகையில் நிர்வகிக்கப்படும். கோடிக்கணக்கான மக்கள் வங்கிக் கணக்குகளை வைத்திருப்பதால், மொபைல் பேங்கிங் சேவை அதிகரிக்கும். மேலும் அரசின் மானியங்களும் இடைத்தரகர்களுக்குப் போகாமல் பயனாளிகளுக்கு சென்று சேரும். அரசுக்கும் குடிமக்களுக்கும் இடையிலான பணப்பரிமாற்றம் ஆன்லைன் மூலம் நடப்பதால், உலக வங்கி வெளியிட்டுள்ள எளிதாக தொழில் செய்யும் நாடுகளின் பட்டியலில் இந்தியா 30 இடங்கள் முன்னேறியுள்ளது. இந்தியா சிறப்பாக செயல்படுவதற்கான வேலையை மோடி தொடங்கிவைத்துள்ளார்.

இவ்வளவு சாதனைகள் இருந்தாலும், பாஜகவின் அதிரடி அரசியல் மற்றும் இந்து தேசியவாதம் வருத்தத்தைத் தருகிறது. மோடி சமூகத்தைப் பிரிக்கிறார். சிறுபான்மையினர் பாதுகாப்பு இல்லாமல் இருப்பதாக உணர்கின்றனர். ஜிடிபி புள்ளி விவரத்தை நம்ப முடியவில்லை.அதேபோல்தான் வேலை வாய்ப்புகள் தொடர்பான அரசு அளித்த விவரத்தையும் நம்ப முடியவில்லை.

பிரதமர் மோடி எந்த இடத்தில் தோல்வி அடைந்தார்? மோசமான அரசு நிர்வாகமும் சிவில் சர்வீஸ் அதிகாரிகளை அதிகம் நம்பியதும்தான் காரணம். ஒரே நேரத்தில் வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல திட்டங்களை அறிவித்ததால் எதுவும் பலன் தரவில்லை. வேலைவாய்ப்புகளை உருவாக்க இந்தியா பல துறைகளிலும் சிறந்து விளங்க வேண்டும். இந்திய ஏற்றுமதியை அதிகரிக்க முடியாது என்ற மோசமான மனப்பான்மையுடன் இருக்கும் ஐஏஎஸ் அதிகாரிகளிடம் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் முக்கியமான பணியை கொடுக்கக் கூடாது. அவர்களிடம் அதற்கான திறமை கிடையாது.

உலக வர்த்தகத்தின் அளவு 16 லட்சம் கோடி டாலர். அதில் இந்தியாவின் பங்கு வெறும் 1.7 சதவீதம்தான். இதை 2.5 சதவீத அளவுக்கு உயர்த்தினாலே, இந்தியாவில் சிறப்பான நல்ல காலம் உருவாகிவிடும். சீனாவில் இருந்து வெளியேறும் வேலை வாய்ப்புகள் வியட்நாம் செல்லாமல், இந்தியாவுக்கு வர வேண்டும்.

குறைவான அரசு தலையீடு.. அதிக நிர்வாகம்.. என்ற கொள்கையை மோடி அறிவித்தபோது, மாநில நிர்வாகத்தில் சீர்திருத்தத்தை அமல் செய்வார் என எதிர்பார்த்தேன். ஒரு வழக்கில் தீர்ப்பு வர ஏன் 12 ஆண்டுகள் ஆகிறது? ஐஏஎஸ் அதிகாரிகளில் சிறந்த அதிகாரிக்கும் வேலையே பார்க்காத அதிகாரிக்கும் ஒரே நாளில் பதவி உயர்வு கொடுத்தால், சிறந்த அதிகாரி எப்படி மேலும் சிறப்பாக பணியாற்றுவார்? ஏற்கெனவே அரசு நிர்வாகம் பலவீனமாக இருக்கிறது. இந்த நிலையில் அடிக்கடி தேர்தல் நடந்து கொண்டே இருப்பதால், நிலைமை இன்னும் மோசமாகத்தான் போகிறது. அதனால்தான், மாநில அரசுகளுக்கும் மத்திய அரசுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தலாம் என மோடி யோசனை தெரிவித்தார். ஆனால் எதிர்க்கட்சிகள் ஆதரவு அளிக்க மறுத்து விட்டன.

சரி... இந்த தேர்தலில் நான் யாருக்கு ஓட்டு போடுவேன்? உண்மையைச் சொன்னால் அது எனக்கே தெரியாது. தேர்தல் நாளில்தான் முடிவு செய்வேன் என நினைக்கிறேன்.

இதுவரையில், மோடிதான் பிரபலமான தலைவராக இருக்கிறார். காங்கிரஸ் கட்சியோ, அதன் கூட்டணிக் கட்சிகளோ மத்தியில் ஆட்சியைப் பிடிப்பார்கள் என்ற நம்பிக்கை கொஞ்சம் கூட இல்லை. மதச்சார்பற்றவராகவும் அதிகாரத்தை விரும்பாதவராகவும் இருந்தால் மோடியைத் தேர்வு செய்யலாம். அல்லது அனுபவமுள்ள, சீர்திருத்தங்களை செய்ய விரும்புபவராக ராகுல் இருந்தால் அவரைத் தேர்வு செய்யலாம். இந்த இரண்டுமே நடக்காத வேலை. இந்த இரண்டு பேரில், மோடி மட்டுமே பொருளாதார மற்றும் நிர்வாகச் சீர்திருத்தங்களை அதிகம் செய்வார் என்பது தெரியும். ஆனால் அதற்கான விலையைக் கொடுக்க வேண்டியிருக்கும். சமூக நல்லிணக்கம் பாதிக்கப்படும். கருத்து வேறுபாடு அதிகரிக்கும். காங்கிரஸ் ஆட்சியில் மதச்சார்பின்மை நன்றாக இருந்தது. ஆனால் அவர் இலவசங்களை வாரி வழங்குவதைத்தான் விரும்பினாரே தவிர, வேலை வாய்ப்புகளை உருவாக்குவதில் ஆர்வம் காட்டவில்லை. நேரு, இந்திரா காலத்தில் இருந்த லைசென்ஸ் ராஜ்ஜியத்தின்போது, இளைஞர்கள் வீணாய்ப் போனதைப் போன்று மேலும் ஒரு தலைமுறை வீணாவதை விரும்புவேனா?

இரண்டுக்கும் பொதுவாக, கட்சி அடிப்படையிலோ அல்லது குருட்டாம்போக்கிலோ அல்லாமல், எது நாட்டுக்கு நல்லதோ அதை மனதில் கொண்டே வாக்களிப்பேன். இப்படி இருப்பதால், யாருக்கு ஓட்டுப் போடுவது என்ற முடிவை எடுப்பதற்கு முன்பு சிந்தித்து, சிந்தித்து மன உளைச்சல் ஏற்படத்தான் செய்யும். அதற்கென்ன செய்வது? பல இந்திய வாக்காளர்களும் என்னைப் போலத்தான் குழப்பத்தில் இருக்கிறார்கள்.

**இவ்வளவு சாதனைகள் இருந்தாலும், பாஜகவின் அதிரடி அரசியல் மற்றும் இந்து தேசியவாதம் வருத்தத்தைத் தருகிறது.**

**தமிழில்: எஸ்.ரவீந்திரன்**